# விடியலின் கீதத்தில்

விடியலின் கீதத்தில்
விழித்தடும் சுடர்களால்
அர்ச்சனையாக்குகின்றோம் தலைவா
இறைவா அனைத்தையும் தருகின்றோம்- 2

**1**
மாணிக்க விழிகள் மண்டியிடும்போது
மனங்களில் உறக்க்மில்லை
பூக்களே கருகிடும் புன்மைகள் பரவியும்
புரட்சிகள் வெடிக்கவில்லை
புதுயுகம் கனவில் புறப்படும் அணியில்
காலடி எடுத்து வைத்தோம் - இன்று
காணிக்கையாகி நின்றோம்

**2**
அடிமைத்தனங்கள் அழுத்திய போது
ஆயிரம் உணர்வலைகள்
நெருப்பினில் கருகிட
வெறுப்பினில் எரிந்திட
ஆயிரம் சோதனைகள்
உன்விழிச் சுடர்கள் தந்திட்ட துணிவில்
காரிருள் கடந்து வந்தோம் - இன்று
காணிக்கையாகி நின்றோம்